ஒரு நாள் இதுபற்றிய விளக்கங்களை என்னையும் பொறியாளர்களையும் அதிகாரிகளையும் வைத்துப் பேசினால் இந்தக் கால்வாய்த் திட்டம் பற்றி முடிவெடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : தலைவரவர்களே, 1968 நடப்பு ஆண்டில் தமிழகத்தில் புதிய பாலங்கள் எவ்வளவு அமைக்க முடியும் என்று கணக்கு தருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது அணையைப் பற்றிய கேள்வி. பாலத்தைப் பற்றியது அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தப் பட்டணங்கால் திட்டத்திலிருந்து ராதாபுரம் வாய்க்காலுக்கு பகிர்ந்து கொடுப்பதில் விதிமுறைகள் பற்றி அரசாங்கத்தில் பூர்த்தியாகிவிட்டதா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் முதலிலேயே சொன்னேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தனியே பேசிவிடலாம் என்று.

போரிங் மெஷின்களுக்கான எரிபொருள், எண்ணெய் வகைகள்

*84 **வினா.—திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாய இலாகாவிலுள்ள போரிங் மிஷின்களுக்குத் தேவையான எரி பொருள், எண்ணெய் வகைகள் டிபார்ட்மென்ட் மூலமாக விநியோகம் செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில்?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை ஐயா.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, போரிங் மிஷின்கள் கொடுப்பது இவ்வளவு காலத்திற்குள்ளாக கொடுக்கப்பட வேண்டும், இவ்வளவு நாட்களுக்குப் பின்னால் கொடுத்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று விதி இருப்பதாகவும், அதேபோல் எரிபொருள், எண்ணெய் இவ்வளவு தான் கொடுக்க வேண்டுமென்ற விதிமுறை இருப்பதாகவும் அந்த விதி முறையை மீறியும் கோவையில் இரண்டொரு அதிகாரிகள் அதற்கான காலத்திற்குப் பிறகு போரிங் மிஷின்கள் கொடுத்திருப்பதாகவும் தெரிய வருகிறது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : போரிங் மிஷின்கள் வழங்குவதில் 'பிரியாரிட்டி லிஸ்ட்' வைத்திருக்கிறோம். அதன் படிதான் வழங்கப்படுகிறது. தனிப்பட்டவர்கள் யாருக்கும் வழங்கப்படவில்லை. அப்படி யாருக்காவது வழங்கியிருந்தால்

அதுபற்றிக் கூறினால் நடவடிக்கை எடுக்கப்படும். எரிபொருள் விவசாயிகள்தான் தர வேண்டுமேயொழிய அரசாங்கம் அல்ல என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. டி. அண்ணாமலை : வணக்கத்திற்குரிய தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டம், சேலம் மாவட்டம், கோவை மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களில் கிணறுகள் தோண்ட வேண்டுமானால் 30 அடி ஆழம் தோண்ட வேண்டி இருக்கிறது. அதற்குக் கீழேதான் தண்ணீர் இருக்கிறது. ஆகவே, ஜெர்மனி போன்ற நாடுகளில் உபயோகப்படுத்துகிற இயந்திரங்களைக் கொண்டு வந்து அந்தக் கிணறுகளை வெட்ட அரசு முன்வருமா ? சுமார் 10 லட்சம் அல்லது அதற்கு மேற்கொண்டு ஒதுக்கி விவசாயிகளுக்கு உதவி செய்து உற்பத்தியைப் பெருக்க சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியதுபோல் 30 அடி, 40 அடிக்கு அவ்வளவு உயர்ந்த இயந்திரங்கள் தேவை இல்லை. இப்பொழுது இருக்கிற போரிங் மெஷின்களே போதுமானவை.

திரு. ஏ. ஆர். சுப்பையர் முதலியார் : போரிங் செட், பிளாஸ்டிங் மெஷின் என்று இரண்டு பாகுபாடு இருக்கின்றன. சில பகுதிகளுக்கு ஆயில் மட்டும் கொடுத்து பார்டி, எரி எண்ணெய் போட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. எரி எண்ணெயை கொடுக்கும் பொழுது எரி எண்ணெயையும் ஆயிலையும் கலப்படம் செய்து கொடுப்பதால் அந்த மெஷின்கள் கெடக் கூடிய முறையில் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, இந்த லூப்ரிகேஷன் எரி எண்ணெய் பூராவும் டிபார்ட்மெண்ட்டலாக இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் இருந்தால், இந்தமாதிரி கலப்படம் செய்வதன் மூலம் மெஷின்கள் கெட்டுவிடும் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதற்கு சர்க்கார் ஏதாவது பரிகாரம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதற்கு ரூ. 500 கடன் தொகை கொடுக்கப்படுகிறது. அந்தக் கடன் தொகையிலே 10 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. அதிலிருந்து எரி பொருளும் எண்ணெயும் விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் லூப்ரிகேஷனில் கலப்படம் செய்வதாகக் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. டி. மார்டின் : அவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினரின் கைவசம் எத்தனை போரிங் பம்ப் மெஷின்கள் இருக்கின்றன என்பதையும், அவற்றில் நெல்லை மாவட்டத்திற்கு எத்தனை கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், எத்தனை வேலை செய்கின்றன என்பதையும் பற்றிய விவரங்களை நமது அமைச்சர் அவர்கள் தருவார்களா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தண்ணீர் இல்லாத வரண்ட பகுதிகளில் இவைகளை வினியோகப்படுத்துவதற்காக இவைகளை அதிகமாக வாங்குவதற்குச் சர்க்கார் எதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுதும் வழங்கிக் கொண்டுதான் இருக்கிறது. தேவையானபொழுது உயர்த்தி வாங்குவதற்காக வேண்டிய உதவியை மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறோம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இன்றைக்கு தஞ்சைக்கு அடுத்தாற்போல் வட ஆற்காடு மாவட்டத்திலே பாறைகள் நிறைந்த பிரதேசம் இருக்கிறது. அங்கு பத்தாயிரக்கணக்கான கிணறுகள் வெட்டியும் தண்ணீர் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே உணவு உற்பத்தி குறைந்திருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அந்தப் பாறைகளைப் போக்கி சுற்றியிருக்கிற இடங்களில் இருந்து தண்ணீர் கொண்டு வர வேண்டுமானால் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. விவசாயிகளுக்கு அது சாதாரணப் பிரச்சினை இல்லை. ஆகவே அதிகப்படியான போரிங் செட்டுகளை வாங்கி இந்த வசதியை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்குமா? அடுத்து, இதற்குக் கட்டணத்தை வசூலிக்கிறார்களே அதில் பாதிக் கட்டணத்தை வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்கள் கூடுதலாக பம்ப் செட்டுகள் வேண்டுமென்கிறார்கள். அதே நேரத்தில் தொகையையும் குறைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இது அவருடைய கட்சியைப் பற்றிப் பிரசாரம் செய்வதற்கு வேண்டுமானால் உதவுமேயொழிய நடைமுறைப்படுத்துவதற்குச் சாத்தியக் கூறுகள் கிடையாது.

திரு. சு. துரைசாமி : இந்த போரிங் மெஷின் வாங்குவதற்கு ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டு அதன்படி வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படி பட்டியல் போட்டு ஏற்கனவே பலருக்கு வழங்கப்பட்டிருந்தாலும், திரும்பவும் அவர்களே கடந்த காலச் செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த போரிங் மெஷினை வாங்கி இருக்கிறார்கள். அது பரிசீலிக்கப்பட்டு, அப்படிப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இன்று இருக்கிற நிலையில் இந்த பிரையாரிட்டி லிஸ்டு பிரகாரம்தான் வழங்கப்படுகிறது. அவர் கூறியது போல் எந்தப் பகுதியிலாவது அந்த விதி மீறப்பட்டிருக்குமானால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தால் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

1968 பிப்ரவரி 20]

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, பிரையாரிட்டி லிஸ்டுபடிதான் போரிங் மெஷின் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினர்கள். எனக்கு போரிங் மெஷின் வேண்டுமென்று மூன்று ஆண்டுகளுக்கு முன் விண்ணப்பித்தும் இன்னும் வரவில்லை என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பிரையாரிட்டி லிஸ்டிலே அவருடைய பெயர் கடைசியிலே இருக்கலாம்.

கால்நடைத் தீவனத் தயாரிப்புப் பிரிவு, திருப்பூர்

*85 **வின.—திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருப்பூரில் உள்ள கால்நடைத் தீவனத் தயாரிப்பு தொழில் பிரிவு எந்த ஆண்டு, எந்தத் தேதியில் ஆரம்பிக்கப் பட்டது?

(இ) நாள் ஒன்றுக்கு எவ்வளவு சத்து நிறைந்த தீவனங்களை விநியோகம் செய்கிறது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) கால் நடைத் தீவனத் தயாரிப்புப் பிரிவு 1967 ஆகஸ்டில் திருப்பூரில் நிறுவப் பட்டது.

(இ) 1967 செப்டம்பரில் 2.6 டன் கால்நடைத் தீவனம் விற்பனையாயிற்று.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த தீவனத் தொழிற்சாலையை ஆரம்பிக்கக் கூடிய நேரத்திலே, அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்தால் எந்த அளவுக்கு நாம் தீவனம் தயாரிக்க முடியும், அதை எவ்வளவு விநியோகம் செய்யலாம் என்று திட்டமிட்டுத்தான் துவக்கி இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்படித் திட்டமிட்டு ஆரம்பித்தும் அங்கே தீவனம் விநியோகிக்காமல் இருப்பதற்கான காரணம் என்ன ? அதை ஆரம்பிப்பதற்கு சர்க்கார் எவ்வளவு ரூபாய் கடன் கொடுத்திருக்கிறர்கள் ? அப்படிக் கடன் வாங்கியும் அதைச் செலவு செய்யாமல் இருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: திருப்பூரில் கால்நடைத் தீவனத் தயாரிப்புப் பிரிவு ஒன்றை நிறுவுவதற்கு காங்கேயம் கால்நடைத் தீவனத் தயாரிப்பு விற்பனை செய்பவர்கள் மனுப் போட்டார்கள். அதற்கு ரூ. 1,20,000 கடனுகவும் உதவித் தொகை யாகவும் வழங்கப்பட்டது. மூலதனக் கடனுக லட்ச ரூபாய் வழங்கி விட்டார்கள். நாள் ஒன்றுக்கு 3 டன் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில்தான் இந்த நிறுவனம் அமைக்கப் பட்டது. ஆனல் இங்கே செப்டம்பர் மாதத்தில் 3.6 டன் தான் உற்பத்தி ஆகிற்று. அதற்குக் காரணம் கேட்டதற்கு கச்சாப் பொருள்கள் போதுமான அளவு கிடைக்காத காரணத்தால் இது